

முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, இருட்டுபள்ளம் லிட்டில் ஹார்ட்ஸ் ஆதரவற்றோர் இல்லத்தில் வழக்கறிஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ம. வெற்றி ஏற்பாட்டில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி மதிய உணவினை வழங்கினார். இதில் ஒன்றிய கழக செயலாளர் சாமிபையன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் எஸ்.இளங்கோவன் உள்பட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம்,தா.பழூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள், தா.பழூர் ஒன்றிய தி.மு.க அலுவலகம் முன்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, க.சொ.க. கண்ணன் தலைமை யில், மாலை அனுவித்து, இனிப்புகள் வழங்கி, பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் எஸ்.சூசைராஜ், த.நாகராஜன், அ.இராஜேந்திரன், இரா. சங்கர், ந.கார்த்திகை குமரன், த.குணசீலன், தங்கபிரகாசம், டாக்டர் மா.சங்கர், எழிலரசி அர்ச்சுனன், நீல.மகாலிங்கம், தா.பழூர் கண்ணன் மற்றும் கழக தோழர்கள்,பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

### நாகை ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் பங்கேற்ற

# ஆய்வுக் கூட்டத்தில் திடீர் மின்வெட்டால் பரபரப்பு!

நாகப்பட்டினம், ஜூன் 12-

நாகை ஆட்சியர் அலுவல கத்தில் அமைச்சர் பங்கேற்ற ஆய்வு கூட்டத்தில் திடீர் மின்வெட்டு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து எல்.இ.டி. திரை வெளிச்சத்தில் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

**ஆய்வு கூட்டம்**

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் இயற்கை இடர் பாடு முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அமைச்சர் ஷாஜகான் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் ஆட்சியர் பிரவீன்குமார், செல்வராஜ் எம்.பி., ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ.மற் றும் பல்வேறு அரசு துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**திடீர் மின்வெட்டு**

கூட்டம் நடந்து கொண்டு இருந்தபோது அரங்கில் திடீ ரென மின் வெட்டு ஏற்பட்டது. திடீரென மின்வெட்டு ஏற்பட்டதால் அரங்கத்தில் பரபரப்பு நிலவியது. உடனடியாக அதனை சரிசெய்யும் பணியில் அங்கிருந்த மின் சார ஊழியர் கள் ஈடுபட்டனர். இருப்பினும் மின்சாரம் வரும்வரையில் கூட்டத்தை நிறுத்த விரும்பாத கலெக்டர் பிரவீன்குமார், அரங்கில் இருந்த பிரமாண்ட எல்.இ.டி. திரையின் வெளிச் சத்தை பயன்படுத்தி கூட் டத்தை தொடர்ந்து நடத்தி னார். அமைச்சரும், அதிகாரிகளும் அந்த வெளிச்சத்திலேயே ஆலோசனை மேற்கொண்ட னர்.

**பரபரப்பு**

கலெக்டர் அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் தானியங்கி வசதி கொண்டதாகும் ஆனால் இந்த ஜெனரேட்டர் நேற்று மின்வெட்டு ஏற்பட்டதும் தானாக இயங்கவில்லை. இதனால் மின் சார ஊழியர்கள் பழுதை சரிசெய்து ஜெனரேட்டரை இயக்கினார்கள். அரங்கிற்கு மின்சாரம் கிடைத்தது. அதன்பிறகே அரங்கில் இருந்த அதிகாரிகள் நிம்மதியடைந்தனர்.

ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் பங்கேற்ற ஆய்வு கூட்டத்தில் திடீ ரென மின் வெட்டு ஏற்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கூட்ட முடிவில் அமைச்சர் ஷாஜகான் நிருபர்களிடம் கூறும்போது, “மாவட்டத்தில் 2 நாட்களுக்கு முன்பு வீசிய கடும் காற்றால் சில பகுதிகளில் சிறிது நேரம் மின்தடை ஏற்பட்டது. அதுவும் சில மணி நேரங்களில் சரிசெய்யப் பட்டது” என்றார்.

**திருச்சி, கடலூர்**

அதேபோன்று, திருச்சி மாவட்ட கிராமப்புறங்களில் மின்வெட்டு அடிக்கடி ஏற்பட்டு வருவதாக கிராம மக்கள் குற்றம்சாட் டுகின்றனர். ஜீயபுரம் பகுதியில் மின்வெட்டால் விவசாயிகள் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் அவதி அடைந்து வருகின்றனர்.

கடலூர் மாவட்டம் விருத் தாசலம் அருகே கம்மாபுரம் பகுதியில் பல மணி நேரம் மின் தடை ஏற்பட்டதால் மின்வாரிய அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு சாலை மறியலிலும் ஈடு பட்டனர்.

மேலும் பண்ருட்டி, சிதம்பரம் பகுதியிலும் அடிக்கடி மின் வினியோகம் நிறுத்தப்படுகிறது.

விழுப்புரம், தர்மபுரி, நாமக்கல், தஞ்சை, திருவாரூர், நாகை, கரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களின் சில பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற் பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிக் குள்ளாகி வருகின்றனர்.

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில் கொண்டு வந்த

# மக்கள் நலத் திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும்!

### வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேட்டி!

கள்ளக்குறிச்சி,ஜூன் 12-

திராவிட மாடல் நல்லாட்சியில் கொண்டு வந்த மக்கள் நல திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கூறினார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர். வசந்தவேல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் பத்மஜாவை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

அதனையடுத்து வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ செய்தியாளர்களிடம் கூறுகையில், புதிதாக பொறுப்பேற்றுள்ள கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட ஆட்சியர் பத்மஜாவை, நானும் வசந்தவேல் எம்எல்ஏ மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய குழு தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உள்ளிட்டவர்களுடன் நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்தோம்.

இந்த மாவட்டம் புதிதாக அறிவிக்கப்பட்ட மாவட்டம். கடந்த 5 ஆண்டு காலம் திராவிட மாடல் நல்லாட்சியில் மக்களுக்கான பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தோம், அந்த திட்டங்கள் நடைபெற்று வருகின்றன, அந்தந்த திட்டங்களை விரைந்து முடிக்க வலியுறுத்தியுள்ளோம். அதுமட்டும் இல்லாமல் இந்த மாவட்டத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்துள்ள நிலுவையில் உள்ள கள்ளக்குறிச்சி புற வழிச் சாலை, உளுந்தூர்பேட்டை வெளிவட்ட சாலை உள்ளிட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம்.

மேலும் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக உள்ளாட்சி பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளு மன்ற உறுப்பினர் ஆகிய அனைவரும் மொத்தமாக குரல் கொடுத்துள்ளோம். மாவட்டத்தின் வளர்ச்சிக்கான தேவைகளை எடுத்துரைத்துள்ளோம், மேலும் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக நாங்கள் ஒட்டுமொத்தமாக நிர்வாகத்துக்கு ஆதரவு தருகிறோம் என மாவட்ட ஆட்சியர் பத்மஜாவிடம் எடுத்துரைத்துள்ளோம் என்றார்.

தொடர்ந்து பேசுகையில் பாலிமர் நியூஸ், நியூஸ் தமிழ் 24 சேனல், தமிழ் ஜனனம் ஆகிய முன்னணி தொலைக்காட்சி செய்தி சேனல்களை அரசு கேபிளில் இருந்து நீக்கப்பட்டதற்கு கள்ளக்குறிச்சி மாவட்ட திமுக சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொண்டார்.

இதில் கள்ளக்குறிச்சி மாவட்ட சேர்மன் புவனேஸ்வரி பெருமாள், நகர சேர்மன் சுப்புராயலு, ஒன்றிய சேர்மன்கள் அலமேலு ஆறுமுகம், சத்தியமூர்த்தி, தாமோதரன், ராஜவேல், வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், அஞ்சலாட்சி அரசகுமார், சாந்தி இளங்கோ, திலகவதி நாகராஜன், பேரூராட்சி சேர்மன்கள் ரேவதி ஜெய்கணேஷ், வீராசாமி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், அண்ணாதுரை உள்ளிட்டோர் உடன் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி

# திருநாவலூர் கிழக்கு, மேற்கு ஒன்றியங்களில் வாக்காளர்களுக்கு நன்றி!

### ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

உளுந்தூர்பேட்டை, ஜூன் 12 -

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர் பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற ஜி.ஆர்.வசந்தவேல் எம்எல்ஏ தனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து வருகிறார், அதன்படி திருநாவலூர் மேற்கு, கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட சேந்தமங்கலம், சேந்தநாடு, மடப்பட்டு, கெடிலம், களமருதூர், நன்னாரம், பிள்ளையார் குப்பம், ஒரத்தூர், கில்லனூர், பெரும்பட்டு, செங்குறிச்சி பாதூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.



அப்போது அவர் பேசுகையில் உளுந்தூர்பேட்டை தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுகிறோம் என்றால் அதற்கு காரணம் நான் கிடையாது, அதற்கு முழு காரணம் இங்கு வந்திருக்கக் கூடிய நீங்கள் தான், இந்த வெற்றி உங்கள் வெற்றி ஏனென்றால் தொடர்ந்து பல்வேறு கிராமத்திற்கு நான் பிரச்சாரத்திற்கு வந்தேன், மக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தேன், இந்த வெற்றிக்காக நீங்கள் அத்தனை பேரும் கடுமையாக உழைத்து இருக்கிறீர்கள், அதற்கு முதலில் என்னுடைய நன்றியை நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தொகுதி முழுவதும் சுற்றினோம், ஒவ்வொரு தெருவாக சென்றோம். எந்தெந்த தெருவுக்கு என்ன வேண்டும், ஒவ்வொரு வீடாக என்னென்ன தேவை என்பதை பார்த்து பார்த்து கடந்த ஐந்து வருடமாக செய்து கொடுத்துள்ளோம், அதே போல் நம்ப தொகுதி மட்டுமல்ல தமிழ்நாட்டில் வேற எந்த தொகுதியாக இருந்தாலும் திராவிட மாடல் நல்லாட்சியில் கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர், அப்போதைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகர், அப்போதைய தமிழக துணை முதல்வர், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு எண்ணற்ற மக்கள் நல திட்டங்களை நிறைவேற்றினார்கள்.

ஆகவே மீண்டும் நம் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி, நம் தலைவர் தலைமையில் மீண்டும் நம் தலைவர் அவர்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான் என்று மீண்டும் பதிவேற்கின்ற நாள் வெகு தூரத்தில் கிடையாது, நாம் அனைவரும் ஒன்றிணைந்து அதை செய்து காட்டுவோம் என்று கூறிக்கொண்டு எனக்கு இந்த வெற்றியை தேடித் தந்த உளுந்தூர்பேட்டை தொகுதி மக்கள், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியை கொள்கிறேன் என ஜி.ஆர்.வசந்தவேல் எம்எல்ஏ கூறினார்.

இதில் திருநாவலூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.வி.முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மத்திய மாவட்டம் பவானி நகரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை விழா தெருமுனை கூட்டம் முன்னாள் நகர்மன்றத் தலைவர் சிந்தூரி இளங்கோவன் தலைமையில் தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு ப.இளையகோபால் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் விடுதலை த.சண்முகம், இளைஞரணி இந்திரஜித், இளங்கோவன் நாகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்! மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# கலைஞர் பிறந்தநாள் விழா! செல்டர் குழந்தைகள் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள்!

மாதவரம், ஜூன் 12-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு செல்டர் குழந்தைகள் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டம் தீயம்பாக்கம் காந்திநகர் பகுதியில் அமைந்துள்ளது செல்டர் குழந்தைகள் காப்பகம். இந்த காப்பகத்தில் வசிக்கக் கூடிய அனைத்து குழந்தைகளுக்கும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அறுசுவை காலை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு 17வது வட்ட செயலாளர் கே.கருணாகரன் தலைமை தாங்கினார்.

இதில் வட்ட நிர்வாகிகள் எஸ்.பாலாஜி, சி.மூர்த்தி, வி.பார்த்தசாரதி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகபிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி.வினோத், ராஜ்குமார், பகுதி ஆதி திராவிடர் நல குழு அமைப்பாளர் எஸ்.நாகராஜ், பாக முகவர்கள் டி.திவாகர், எம். மைக்கேல், வி.சுமிர், கார்த்திக், இளைஞரணி அமைப்பாளர் வக்கீல் எம்.என்.தளபதி, பி.செந்தில், கார்த்திக், எம்.கோவிந்தன், சின்னத்தோப்பு ஜி.முனிவேல், தீயம்பாக்கம் எம்.ஜான்சன், ஜி.பூபாலன், சுதர்சன், தியாகி விஸ்வநாததாஸ் நகர் சுரேஷ், கொசப்பூர் விஷ்ணு, விக்கி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

**ஜூன் 12 (2020)**



**தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**